செ.வெ.எண்.127/2018 நாள்: 24.03.2018

## காஞ்சிபுரம் மாவட்டம், திருபெரும்புதூரில் சவுத் இந்தியன் வங்கியின் புதிய கிளையை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்தார்.

காஞ்சிபுரம் மாவட்டம், திருபெரும்புதூரில் சவுத் இந்தியன் வங்கியின் புதிய கிளையை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்தார். சவுத் இந்தியன் வங்கியின் புதிய கிளையை திறந்து வைத்து பேசிய மாவட்ட ஆட்சித்தலைவர்,

சவுத் இந்தியன் வங்கியின் புதிய கிளை திறப்பு விழாவிற்கு வருகைபுரிந்துள்ளவர்கள் மற்றும் புதிய கிளையின் வாடிக்கையாளர்களான உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். நமது நாட்டில் 1860ஆம் ஆண்டில் வங்கி சேவை துவங்கப்பட்டது. சில முன்னணி வங்கிகள் 1970ஆம் ஆண்டில் தேசியமயமாக்கப்பட்டன. மற்ற வங்கிகள் தனியார் வங்கிகளாக தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன. இந்திய நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியின் பெரும் பங்கு வங்கிகளைச் சார்ந்துள்ளது. ரிசர்வ வங்கியின் சட்டத்தின் கீழ் 1946ஆம் ஆண்டில் கேரளாவில் தனியார் வங்கிகளில் அட்டவணை படுத்தப்பட்ட வங்கிகளில் முதன்மையானதாக சவுத் இந்தியன் வங்கி விளங்கியது. இந்தியாவில் ரிசர்வ் வங்கியின் சார்பில் தனியார் வங்கிகளில் முதலாவதாக பண பாதுகாப்பு பெட்டக வசதி அமைக்கப்பட்ட வங்கி சவுத் இந்தியன் வங்கி. தனியார் வங்கிகளில் முதலாவதாக அயல்நாட்டு வாழ் இந்தியர்களுக்கான கிளை 1992ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சவுத் இந்தியன் வங்கியில் துவங்கப்பட்டது. 1993ஆம் ஆண்டு மார்ச் மாதம் பிரத்யேக தொழில் நிதியுதவி (Industrial Finance branch) கிளை முதலாவதாக சவுத் இந்தியன் வங்கி சார்பில் அமைக்கப்பட்டது. தற்போது ஆரம்பிக்கப்பட்ட திருபெரும்புதூர் மற்றும் ஒரகடம் பகுதியில் தொழிற்பேட்டை அமைந்துள்ள இடமாக உள்ளதால் பெரிய தொழிற்சாலைகள் சார்ந்த சிறிய தொழில்கள் தொடங்க வாய்ப்பு உள்ளது. எனவே இளைஞர்கள் தொழில் தொடங்க தேவையான கடனுதவி அளித்து, சிறிய தொழில் கூடங்கள் அமைய உதவிட வேண்டும். சவுத் இந்தியன் வங்கியின் கிளைகளை சென்னையை ஒட்டியுள்ள இப்பகுதியில் அதிகமாக துவங்கி அனைவருக்கும் இவ்வங்கியின் சேவை கிடைக்குபடி செயல்பட வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சவுத் இந்தியின் வங்கியின் துணை பொது மேலாளர் மற்றும் சென்னை மண்டல தலைவர் திருமதி.எஸ்.எஸ்.பிஜி, திருபெரும்புதூர் கிளையின் முதன்மை மேலாளர் திருமதி.லட்சுமி நந்தகுமார், மேலாளர் கிரிபேஸ் ஆகியோர் கலந்து கொண்டார்.

**செய்தி வெளியீடு,**

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.



காஞ்சிபுரம் மாவட்டம், திருபெரும்புதூரில் சவுத் இந்தியன் வங்கியின் புதிய கிளையை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்தார். உடன் சவுத் இந்தியின் வங்கியின் துணை பொது மேலாளர் மற்றும் சென்னை மண்டல தலைவர் திருமதி.எஸ்.எஸ்.பிஜி, திருபெரும்புதூர் கிளையின் முதன்மை மேலாளர் திருமதி.லட்சுமி நந்தகுமார், மேலாளர் கிரிபேஸ் ஆகியோர் உள்ளனர்.